**கவனிக்க** .- 2014.08.15 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) மற்றும் பகுதி III ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1877 - 2014 අගෝස්තු මස 22 වැනි සිකුරාදා - 2014.08.22

1877 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1012 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1018 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**- மாநகர சபைகள் (திருத்தச்) சட்டமூலம் 2014, ஓகத்து மாதம் 01 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2014, செத்தெம்பர் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, ஓகத்து மாதம் 29 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பதவிகள் — வெற்றிடம்

## கலேவெல பிரதேச சபை

மத்திய மாகாண அரச சேவையின் கலேவெல பிரதேச சபையில் நிலவும் பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கென ஆட்சேர்ப்புக்காக கலேவெல பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | பதவிப்பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பளத் திட்டம் | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| 1 | வேலை/வெளிக்களத் தொழிலாளர்கள் (தரம் III) | 2 | PL1-2006A<br>ரூ. 11,730 - 10× 120 - 10 ×130 -10 × 145 - 12 × 160 - ரூ. 17,600 | (அ) ஆகக் குறைந்தது தரம் 8 இல் (ஆண்டு 9 இல்) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். |
| 2 | சுகாதாரத் தொழிலாளர்கள் (தரம் III) | 3 | PL1-2006A<br>ரூ. 11,730 - 10× 120 - 10 ×130 -10 × 145 - 12 × 160 - ரூ. 17,600 | (ஆ) ஆகக் குறைந்தது தரம் 8 இல் (ஆண்டு 9 இல்) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். |

2. **பொதுவான தகைமைகள்**.-

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) சிறந்த நல்லொழுக்கம் உள்ளவராகவும், நல்ல தேகாரோக்கியம் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும் ;

(iii) வெற்றிடங்களுக்கான விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே மாகாண அரச சேவையில் உள்ளோருக்கு இந்த வயதெல்லை பொருந்தாது);

(iv) விண்ணப்பதாரிகள் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்கு முன்னரான 03 வருட காலம் கலேவெல பிரதேச சபையின் எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும். (வாக்காளர் இடாப்பு அல்லது பிரதேச செயலாளர் உறுதிப்படுத்திய சான்றிதழால் உறுதிப்படுத்துதல் வேண்டும்) ;

(v) தண்டனைச் சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டவராக இருத்தல் கூடாது ;

(vi) கலேவெல பிரதேச சபையில் தற்போது பணியாற்றுவோர் மீது முன்னுரிமை வழங்கப்படும்.

(vii) விண்ணப்பதாரிகள் வம்சாவளியினாலோ அல்லது பதிவினாலோ இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

3. **ஆட்சேர்ப்பு முறை**.- நேர்முகப் பரீட்சை ஒன்றுக்கு உட்படுத்தப்பட்டுத் தகைமைகள் பரிசீலிக்கப்பட்ட பின்னர் ஆட்சேர்ப்பு நடைபெறும்.

4. **சேவையில் ஈடுபடுத்தப்படும் நிபந்தனைகள்** :

(i) இந்தப்பதவிகள் நிரந்தரமானவை, ஓய்வூதியம் கொண்டவை உரிய விதத்தில் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்குப் பங்களிப்பு செய்தல் வேண்டும் ;

(ii) நியமனங்கள் மூன்று வருடகால தகுதிகாண் சேவைக்கு உட்படும் ;

(iii) இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கும் விதிகளுக்கும் மேலதிகமாகத் தாபன விதிக் கோவையின் நிபந்தனைகளுக்கும், நிதிப் பிரமாணங்களுக்கும், மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு காலத்துக்குக் காலம் விதிக்கும் நிபந்தனைகளுக்கும் மற்றும் உள்ளூராட்சி தாபனங்களது கட்டளைச்சட்டங்கள், சட்டவிதி ஏற்பாடுகள் என்பவற்றுக்கும், கலேவெல பிரதேச சபை விடுக்கும் கட்டளைகளுக்கும் அமைய செயற்படுதல் வேண்டும்.

5. **விண்ணப்பிக்கவேண்டிய முறை**.- தற்போது அரச/மாகாண அரச சேவையில் பணியாற்றுவோர் தமது விண்ணப்பப்படிவங்களைத் திணைக்களத் தலைவரூடாக அனுப்பி வைத்தல் வேண்டும். குறித்த திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின்னர் அல்லது அதற்கிடையில் இந்த ஆட்சேர்ப்பைத் தாமதப்படுத்தும், மாற்றியமைக்கும் அல்லது அறிவிப்பைத் திருத்தும் அனைத்து அதிகாரங்களும் கலேவெல பிரதேச சபையின் செயலாளருக்கு உண்டு.

இந்த அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்துக்கு அமையத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2014, ஓகத்து 31 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கும் வண்ணம் "செயலாளர், கலேவெல பிரதேச சபை, கலேவெல" என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் மட்டுமே அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்துடன் பின்வரும் ஆவணங்களது பிரதிகளை இணைத்து அனுப்பி வைத்தல் வேண்டும்.

1. பிறப்புச் சான்றிதழ் ;
2. கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ;
3. தேசிய அடையாள அட்டையின் பிரதி ;
4. அண்மையில் பெறப்பட்ட இரண்டு குணச் சான்றிதழ்கள் (அவற்றில் ஒன்று கிராம அலுவலரால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்) ;
5. தற்போது இந்த அமையத்தில் சேவையில் ஈடுபட்டுள்ளவரெனின், சேவைச் சான்றிதழ்.

எச். நிமல் குணவர்தன,
செயலாளர்,
கலேவெல பிரதேச சபை.

கலேவெல பிரதேச சபை அலுவலகம்,
கலேவெல,
2014, யூலை 7.

மாதிரி விண்ணப்பப்படிவம்

மத்திய மாகாண அரச சேவையின் கலேவெல பிரதேச சபையில் நிலவும் . . . . . . . . . . . . . . . . . . . . பதவிக்கான விண்ணப்பம்

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் : -----.
 (ii) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் : -----.
2. நிரந்தர முகவரி : -----.
3. கிராம அலுவலர் பிரிவும் இலக்கமும் : -----.
4. பிறந்த திகதி :-
 வருடம் : ----- மாதம் : ----- திகதி : -----.
5. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் உள்ளவாறான வயது :-
 வருடங்கள் :----- மாதங்கள் :----- நாட்கள் :----.
6. ஆண்/பெண் : -----.
7. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : -----.
8. கலேவெல பிரதேச சபை எல்லைக்குள் நிரந்தர வதிவுக் காலம் :
 வருடங்கள் :----.
9. நீர் இலங்கைப் பிரசையாவது வம்சாவழியினாலா அல்லது பதிவினாலா: -----.
10. கல்வித் தகைமைகள் : ----.
11. ஏனைய தகைமைகள் :-----.
12. தொழிற் தகைமைகள் :-----.
13. சேவை அனுபவம் :-----.
 (i) தற்போதைய சேவை நிலையம் :
 (ii) தற்போது வகிக்கும் பதவி :
 (iii) அந்தப்பதவிக்கு நியமனம் பெற்ற திகதி :
 (iv) இதற்கு முன்னர் பணியாற்றிய நிலையமும் வகித்த பதவியும் :----.

இந்த விண்ணப்பப் படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தும் நான் அறிந்த வரையில் உண்மையானதெனவும் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன். ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கமைய இங்கு தரப்பட்டுள்ள விடயங்களுள் ஏதேனும் பொய்யானவை என நிரூபிக்கப்பட்டால், நியமனத்துக்கு முன்னரெனின் நான் தகுதியற்றவனாக ஆக்கப்படுவேன் என்பதையும், நியமனத்தின் பின்னரெனின், நட்டஈடு எதுவுமின்றி பதவி நீக்கம் செய்யப்படுவதற்கு உட்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : -----.

**தற்போது சேவையிலுள்ளோருக்கான திணைக்களத் தலைவரது உறுதியுரை**

விண்ணப்பதாரி திரு./ திருமதி/ செல்வி ............................................... தற்போது இந்த திணைக்களத்தில்/ நிறுவகத்தில் .......................................... ஆகப் பணியாற்றுகின்றார். அவரால் முன்வைக்கப்பட்டுள்ள மேற்காட்டிய தகவல்கள் சரியானவை எனவும், அவர் தெரிவு செய்யப்பட்டால் தற்போதைய பதவியிலிருந்து அவரை விடுவிக்க முடியும்/முடியாது எனவும், எவ்வகையான ஒழுக்காற்று நடவடிக்கையும் அவர்மீது மேற்கொள்ளப்படவில்லை எனவும் உறுதிப்படுத்தி அவரது விண்ணப்பத்தைப் பரிந்துரைத்து முன்வைக்கின்றேன்.

-----,
திணைக்களத் தலைவரது கையொப்பம்.

பெயர் :-----.
பதவி :-----.
திணைக்களம்/நிறுவனம் (பதவி முத்திரையை இடவும்) :-----.
திகதி :-----.

8-673

---

**சீதாவக்கபுர நகர சபை - அவிசாவளை**

பதவி - வெற்றிடங்கள்

**மேல் மாகாண சபையின் அரச சேவை வெற்றிடங்கள்**

மேல் மாகாண, மாகாண அரச சேவையின் சீதாவக்கபுர நகர சபையில் வெற்றிடங்களாக உள்ள கீழ் குறிப்பிடப்படும் வெற்றிடங்களுக்குரிய குறைந்த தகைமைகளினை பூர்த்தி செய்துள்ள மேல் மாகாண சபையில் நிரந்தரமாக வசிப்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. அறிவித்தலில் இறுதியாக உள்ள மாதிரி விண்ணப்பப்படிவங்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் (12" × 8") "செயலாளர், சீதாவக்கபுர நகர சபை, அவிசாவளை" என்னும் முகவரிக்கு 2014.09.12 ஆந் திகதிக்கு முன்பதாக கிடைக்கப்பெறும் விதத்தில் பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரடியாக சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பப்படிவம் இடப்படும் கடித உறையின் மேல் பக்க இடது மூலையில் உரிய பதவியினை குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும். பூரணமற்ற விண்ணப்பங்களினைப் போன்றே உரிய திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் தள்ளுபடி செய்யப்படும். தற்பொழுது அரச சேவையில் உள்ளவர்களின் விண்ணப்பங்கள் தமது திணைக்களத் தலைவரின் ஊடாக அனுப்பப்படல் வேண்டும்.

| இலக்கம் | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பள அளவு (மாதாந்தம்) | கல்வி மற்றும் வேறு தகைமைகள் |
|---|---|---|---|---|
| 01 | சாரதிகள் (II ஆ வகுப்பு) | 01 | ரூ. 12,470-10 x 130-10×145-10×160-12×170-ரூ. 18,860 (PL-3(2006 A) | (i) க.பொ.த.(சா.த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு களுக்கு மேற்படாத தடவைகளில் விசேட சித்திகள் இரண்டுடன் 6 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். (ஒரே அமர்வில் 5 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்)<br>(ii) தனியார் வாடகை வாகனம் அல்லது கனரக 24 அந்தருக்கு குறைவான ஸ்டேசன் வேகன் வண்டி செலுத்துதல் பற்றிய மோட்டார் வாகன போக்கு வரத்து ஆணையாளரால் வழங்கப்பட்ட நிபுணத் துவம் பற்றிய சான்றிதழினை பெற்றிருத்தல்.<br>(iii) வாகனச் சாரதியாக 3 வருடங்கள் அனுபவத்தினை சான்றிதழின் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும். |

| இலக்கம் | பதவிப் பெயர் | வெற்றிடங்கள் எண்ணிக்கை | சம்பள அளவு (மாதாந்தம்) | கல்வி மற்றும் வேறு தகைமைகள் |
|---|---|---|---|---|
| | | | | (iv) குறைந்தது உயரம் 05 அடிகளாவது இருத்தல் வேண்டும்.<br>(v) இரவு பகல் சேவையில் ஈடுபடுவதன்பொருட்டு உடல் ரீதியான பொருத்தமான நிலைமை இருத்தல் வேண்டும் என்பதுடன் கண்பார்வை உள்ளவராக இருத்தல் வேண்டும்.<br>(vi) வீதிச் சட்டக்கோவை பற்றிய சிறந்த அறிவு இருத்தல் வேண்டும். |
| 2 | கனரக வாகன இயக்குனர்கள் (II ஆம் தரம்) | 01 | ரூ. 12,470-10 x 130-10×145-10×160-12×170-ரூ. 18,860 (PL-3 (2006 A) | (i) தேசிய கல்விப் பொதுத்தராதர (சா.த.) பரீட்சை அல்லது கல்விப் பொதுத் தராதர பத்திர (சா. த) பரீட்சையில் ஏதாவது 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.<br>(ii) பாரம் 34 அந்தருக்கு அதிக பாரம் கொண்ட மோட்டார் வாகனம் மற்றும் கனரக டேலர் மற்றும் 32 பிரயாணிகளினை விட கொண்டு செல்லக்கூடிய அனுமதிப்பத்திரத்துடன் கூடிய பேருந்து வண்டியினை ஓட்டக்கூடிய மோட்டார் போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட நிபுணத்துவம் பற்றிய சான்றிதழினை பெற்றிருத்தல்.<br>(iii) குறைந்த உயரம் 5 அடி 6 அங்குலமாக இருத்தல் வேண்டும்.<br>(iv) சேர்த்துக்கொள்ள உத்தேசித்துள்ள பதவிக்குரிய கனரக வாகன இயக்கம் பற்றிய அரசாங்கத்தினால் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தினால் ஒரு வருடத்திற்கு குறையாத நிபுணத்துவத்தினை பெற்றிருத்தல் (ஏற்றுக் கொள்ளப்படும் நிறுவனமாக அரசாங்க நிறுவனம், மாகாண அரச நிறுவனம், பகுதி அரச நிறுவனம், மாகாண நிருவாக நிறுவனம் அல்லது அரசின் கீழ் பதிவு செய்த தனியார் நிறுவனம் என அடையாளப்படுத்தப்படும்.)<br>(v) மோட்டார் இயந்திர விஞ்ஞானம் பற்றிய அடிப்படை அறிவினை பெற்றிருத்தல் வேண்டும். |
| 3. | அலுவலக பணியாளர்கள் சேவையின் III ஆம் வகுப்பு (சுகாதாரப் பணியாளர்கள்) | 05 | ரூ. 11,730-10 x 120-10×130-10×145-12×160-ரூ. 17,600 (PL-1(2006 A) | கல்வித் தகைமை கருத்திற் கொள்ளப்படமாட்டாது. |

*3.* **வயதெல்லை**.- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதிக்கு வயது 18 வருடத்திற்கு குறையாமலும் 45 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். தற்பொழுது அரச சேவையில் உள்ளவர்களுக்கு இந்த வயதெல்லை பொருத்தமற்றது.

*4.* **ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் முறை**.-

01. கீழ் காணப்படும் (i), (ii), (iii) இல் குறிப்பிடப்பட்ட அனைத்து ஆட்சேர்ப்புக்களும் அரச நிருபன சுற்றுநிருப இலக்கம் 24/95 இற்கு இணங்கியதாக இருத்தல் வேண்டும்.

(i) சுகாதார பணியாளர்களுக்கான பதவிகளுக்காக தகைமையினை பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சையின் மூலம் சேர்த்துக்கொள்ளப்படுவர் ;

(ii) சாரதிகள் பதவிகளுக்காக நேர்முகப்பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

(iii) கனரக இயந்திர இயக்குநர் பதவிக்காக வாய்மூல மற்றும் செயன்முறை பரீட்சையின் புள்ளிகளின் அடிப்படையில் ஒழுங்குமுறைமையிலான நேர்முகப் பரீட்சையின் பேரில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

**5. பதவியில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்.-**

(i) இந்தப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமாகும் ;

(ii) விதவைகள், தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு செய்தல் வேண்டும் ;

(iii) தெரிவு செய்யப்படுபவர்கள் மூன்று வருட அவதானிப்பு காலத்திற்கு உட்படுவர் இக்காலப்பகுதியினுள் வேலை, வரவு மற்றும் நடத்தை திருப்திகரமானதாயின் அவதானிப்பு காலத்தின் இறுதியில் சேவையில் நிரந்தரப்படுத்தப்படுவர் தற்பொழுது அரச சேவையில்/மாகாண அரசாங்க சேவையில் உள்ளவர்களின் பதவி நிரந்தரப்படுத்தப்படுவது ஒரு வருட வேலை அவதானிப்பு காலத்திற்கு இணங்க சேர்த்துக்கொள்ளப்படுவர் ;

(iv) தாபன விதிக் கோவையின் நிபந்தனைகளுக்கு மேல் மாகாண சபையின் நிதி ஒழுங்கு விதிகளுக்கு, கௌரவ ஆளுநர் அவர்களின் கட்டளைகளுக்கு மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் காலத்திற்கு காலம் இடப்படும் வேறு கட்டளைகளுக்கு, மாகாண நிருவாக தலைவரின் கட்டளைகளுக்கு இணங்கியதாக அனைத்து ஊழியர்களும் கட்டுப்படல் வேண்டும்.

**6. பொதுவான தகைமைகள்.-**

(i) இலங்கையராக இருத்தல் வேண்டும் ;

(ii) சிறந்த நடத்தை மற்றும் சிறந்த உடல் நலமுள்ளவராய் இருத்தல் வேண்டும் ;

(iii) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதிக்கு கிட்டிய 03 வருட காலத்தினுள் மேல் மாகாணத்தில் நிரந்தர வதிவிடதாரியாக இருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரியதன் பின்னர் அல்லது கோரப்படும் காலப்பகுதியினுள் இந்த ஆட்சேர்ப்பினை தாமதப்படுத்தல் அல்லது மாற்றுதல் அல்லது இந்த அறிவித்தலினை இரத்துச் செய்தல் அல்லது திருத்துதல் சீதாவாக்கபுர நகர சபையின் செயலாளருக்குரித்தானதாகும்.

8. விண்ணப்பதாரர் கீழ் காணப்படும் ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியினை தமது விண்ணப்பத்துடன் இணைத்தனுப்புதல் வேண்டும்.

(i) பிறப்புச் சான்றிதழ் ;

(ii) தேசிய அடையாள அட்டையின் நிழற்படப் பிரதி/கடவுச் சீட்டின் நிழற்படப் பிரதி ;

(iii) அண்மையில் (6 மாத காலத்தினுள்) பெற்றுக்கொண்ட நன்னடத்தை பற்றிய இரண்டு சான்றிதழ்கள்.

(iv) வதிவினை உறுதிப்படுத்தும் பொருட்டு அண்மையில் (06 மாத காலத்தினுள்) பிரதேச செயலாளரின் ஒப்பத்துடன் கூடிய கிராம அலுவலரின் சான்றிதழ்;

(v) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரத்தின் பிரதி (சாரதி/கனரக இயந்திர பதவிகளுக்காக மட்டும்)

(vi) கல்விச் சான்றிதழ் மற்றும் தொழில் தகைமைச் சான்றிதழ்கள் ;

(vii) அனுபவங்கள் பற்றிய சான்றிதழ்கள்.

எம். எச். டீ சசிகா தேவபிரிய,
செயலாளர்,
சீதாவக்கபுர நகர சபை,
அவிஸ்ஸாவெல்ல.

நகர சபை அலுவலகம்,
சீதாவக்க,
2014, ஓகத்து 07.

மாதிரி விண்ணப்பப்படிவம்

சீதாவக்கபுர நகர சபை - அவிசாவளை

மேல் மாகாண உள்ளூராட்சி அரச சேவையின் ........................................................................ பதவிக்கான விண்ணப்பம்

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் :----.

2. நிரந்தர வதிவிட மாவட்டம் :----.
3. நிரந்தர முகவரி :----.
4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.
5. ஆண்/பெண் பால் நிலை :----.
விவாகமானவரா/விவாகமாகாதவரா :----.
6. பிறந்த திகதி :-
2014 ........... ஆந் திகதியன்று வயது :-
வருடங்கள் :---- மாதங்கள் :---- நாட்கள் :----.
7. இலங்கைப் பிரசையானது பிறப்பின் மூலமா அல்லது பதிவின் மூலமா? :----.
8. கல்வித் தகைமைகள் (தேர்ச்சிபெற்றுள்ள பரீட்சைகள் பற்றிய விபரங்கள்) :-
(i) தேர்ச்சி பெற்ற வருடம்/தரம் :----.
(ii) க. பொ. த. (சா. த.) பரீட்சை :----.
சுட்டிலக்கம் :----.
சித்திபெற்ற வருடமும் மாதமும் :----.
தேர்ச்சி பெற்ற பாடங்கள்

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| ............ | ............ | ............ | ............ |
| ............ | ............ | ............ | ............ |
| ............ | ............ | ............ | ............ |
| ............ | ............ | ............ | ............ |
| ............ | ............ | ............ | ............ |

(iii) க. பொ. த. (உ.த.) பரீட்சை :----.
சுட்டிலக்கம் :----.
சித்திபெற்ற வருடமும் மாதமும் :----.
தேர்ச்சி பெற்ற பாடங்கள்

| பாடம் | தரம் |
|---|---|
| ............ | ............ |
| ............ | ............ |
| ............ | ............ |
| ............ | ............ |

9. தொழில் தகைமைகள் (சான்றிதழ்களின் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்) :-
.................................................................................................................................................................
10. வேலை அனுபவம் :-
.................................................................................................................................................................
11. தாங்கள் எப்பொழுதாவது ஏதும் குற்றத்திற்காக நீதிமன்றத்தினால் குற்றவாளி ஆக்கப்பட்டுள்ளீர்களா? :----.
12. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானதெனவும் சரியானதெனவும் உறுதிப்படுத்துகின்றேன். இந்த ஆட்சேர்ப்பு பற்றிய நிபந்தனைகளுக்கிணங்க என்னால் பிழையான தகவல்கள் தரப்பட்டுள்ளதாக தெரியவரின் நியமனம் பெறும் முன்னராயின் தகைமையற்றவராவேன் என்றும் நியமனம் பெற்ற பின்னர் தெரியவரின் சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்றும் நான் அறிவேன்.

------,
விண்ணப்பதாரரின் கையொப்பம்

திகதி :----.

**ஏற்கனவே அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கான திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

இந்த விண்ணப்பதாரரான திரு./ திருமதி/ செல்வி ........................................................ அவர்கள் தற்பொழுது இந்தத் திணைக்களத்தில்/ நிறுவனத்தில் ........................................ ஆக கடமை புரிகின்றார். அவரை சேவையிலிருந்து விடுவிக்கப்பட முடியும்/ முடியாது. அவர் எந்த விதத்திலும் ஒழுக்காற்று தண்டனைக்கும் (எச்சரிக்கை தவிர்ந்த) உள்ளாகியுள்ளார்/ உள்ளாகவில்லை எனவும் உறுதிப்படுத்துவதுடன், விண்ணப்பத்தினை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன்.

--------,
திணைக்கள தலைவரின் கையொப்பம்.

பெயர் :-----.
பதவி :-----.
திணைக்களம்/ நிறுவனம்:----.
(பதவி முத்திரை இடவும்)
திகதி : -----.

8-812

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**மஹரகம நகர சபை**

நகரசபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 50 ஆம் மற்றும் 52 ஆம் பிரிவுகளின் நியதிகளின்படியிலான அறிவித்தல்

நகரசபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 50 ஆம் மற்றும் 52 ஆம் பிரிவுகளின் நியதிகளின்படி மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தில் உள்ள மஹரகம பிரதேச செயலாளர் பிரிவில் மஹரகம நகரசபையின் எல்லைகளில் அமைந்துள்ள பின்வரும் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட வீதிகள் மஹரகம நகர சபைக்கு உரிய வீதிகளாக பிரகடனப்படுத்தப்படல் வேண்டும் என்று பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட வீதிகள் மஹரகம நகர சபையினால் உடைமையாக்கப்படுகின்றன என்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. பொதுமக்கள் அல்லது உரிய காணி உடைமையாளர்களிடமிருந்து இந்த விடயம் குறித்து ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் அத்தகைய ஆட்சேபனைகள் பொருட்டான காரணங்கள் வர்த்தமானியில் இந்த அறிவித்தல் பிரகரிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாத காலப் பகுதியினுள் எழுத்தில் கொடுக்கப்படல் வேண்டும்.

3. ஆட்சேபனைகள் எதுவும் குறிப்பிடப்பட்ட காலப்பகுதியினுள் தெரிவிக்கப்படாவிடில் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட வீதிகள் மஹரகம நகரசபைக்கு சொந்தமானதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு கட்டுப்படுத்தப்படும் என்று இத்தால் பொதுமக்களின் தகவல் பொருட்டு அறிவிக்கப்படுகின்றது.

காந்தி கொடிகார,
தலைவர்,
மஹரகம நகரசபை.

நகர சபை அலுவலகம்,
மஹரகம,
2014, யூலை 30.

**அட்டவணை**

வீதியின் பெயர் : ருக்மலே பாலிகா வீடுகள் வீதிக்கு முன்னால் அமைந்துள்ள வரிப்பண இலக்கம் 192/3 முதல் 192/A வரையான வீடுகள் அமைந்துள்ள வீதி.

நீளம் : 540 அடி
அகலம் : 11 அடிக்கும் 13 அடிக்கும் இடையே
ஆரம்ப இலக்கம் : வ. இ. 194
இறுதி இலக்கம் : வ. இ. 192/7

வீதியின் பெயர் : மஹரகம பன்சல வீதியில் "சும இம வத்த" எனும் பெயருடைய குடியிருப்பு கட்டிடத்திற்கு உட்பிரவேசிக்கும் வீதி (இல. 159 முதல் 159/1 வரை வீடுகள் அமைந்துள்ள வீதி.)

நீளம் : 412 அடி
அகலம் : 20 அடி
ஆரம்ப இலக்கம் : வ. இ. 159
இறுதி இலக்கம் : வ. இ. 159/G

வீதியின் பெயர் : மஹரகம, நாவின்ன, பழைய கொட்டாவை வீதி, இலக்கம் 89/A முதல் 89/2 வரை வீடுகள் அமைந்துள்ள ஒழுங்கை

நீளம் : 430 அடி
அகலம் : 10 அடி
ஆரம்ப இலக்கம் : வ. இ. 89
இறுதி இலக்கம் : வ. இ. 89/14

இடதுப்பக்க குடியிருப்பாளர்கள்

1. திருமதி ஸிலா வடுகே
2. திருமதி ஈ. டீ. லலிதா டி. அல்விஸ்
3. திரு. தர்மா கருணாரத்ன
4. திரு. ஈ. டீ. சமிந்த அல்விஸ்

வலதுப்பக்க குடியிருப்பாளர்கள்

1. திரு. டீ. ஏ. கொத்தலாவல
2. திரு. பீ. ஏ. தர்மதாச
3. திரு. ஹேமந்த பட்டகொட
4. திரு. வசந்தா பட்டகொட
5. திரு. பந்து சில்வா
6. திரு. ஏ. ஈ. ஏ. ஹேமபால டி அல்விஸ்

8-672

---

**பதுளை மாநகர சபை**

*1947 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 48 (1) ஆவது பிரிவின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்*

1947 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 48 (1) ஆவது பிரிவின் நியதிகளின் படி ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்ட பதுளை மாநகர சபையின் மூலம் இங்கு கீழ் உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பாதையைப் பொதுவான உபயோகத்திற்காக பதுளை மாநகர சபைக்கு உரிமையாக்குவதற்கு முடிவுகள் 2014.04.01 ஆந் திகதியுடைய 6 ஆம் இலக்க சபை முடிவின் படி தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2014.06.06 ஆந் திகதிய 1866 ஆம் இலக்கத்தைக் கொண்ட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டவாறு, சொல்லப்பட்ட கால எல்லைக்குள் அறிவித்திருந்ததன்படி, எதிர்ப்பு ஏதும் இல்லாததால், அந்த வர்த்தமானி மூலம் பிரசுரிக்கப்பட்டுள்ள இங்கு சொல்லப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதையை பதுளை மாநகர சபைக்கு உரிமையான பாதையொன்றாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, நிர்வாகம் செய்யப்படுமென்பதைப் பிரகடனப்படுத்தப்படுகின்றது.

உபாலி நிஸ்ஸங்க குணசேகர,
மாநகர பிதா,
பதுளை மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
பதுளை,
2014, யூலை 22.

**அட்டவணை**

| தொடர் இலக்கம் | பாதையின் பெயர் | ஆரம்பிக்கும் ஸ்தானம் | முடிவுறும் ஸ்தானம் | இடது பக்க வரிப்பண இலக்கம் | வலது பக்க வரிப்பண இலக்கம் | நீளம் மீற்றர் | அகலம் மீற்றர் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | மெதப்பத்தன கல்வலப் பாதை | மெதப்பத்தன சுற்றுவட்டப் பாதை | கல்வல | 87/2, 87/3, 87/5 | 87/14, 87/16, 87/08, 87/10, 87/8A | 250 | 4.5 |

8-710